**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 29.6.2018 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 29.6.2018

**பொருள்: 1**

உசிலம்பட்டி நகராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) அலுவலகத்தில் 19.6.2018 அன்று மதிப்பீட்டுக்கூட்டம், (Appraisal Meeting) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) பொறியாளர்களுடன், திட்டம் குறித்து விரிவாக கலந்தோசிக்கப்பட்டது. அதில் இந்நகராட்சிக்கு 2050–ம் ஆண்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவைப்படும் குடிநீரின் அளவான 8.60 எம்.எல்.டி. அளவிற்கு திட்ட வடிவமைப்பை மாற்றிமையத்து திட்ட மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் கடிதம் எண். 2501/எப்/உசிலம்பட்டி/டபுள்யூ.எஸ்.ஐ.எஸ்./ஜெடிஓ/2017, நாள். 22.6.2018–ல் கீழ்க்காணும் விபரங்களை குறிப்பிட்டு மன்றத்தீர்மானம் அனுப்ப தெரிவிக்கப்பட்டது. எனவே, கீழ்க்கண்ட பொருளுக்கு மன்ற அனுமதிக்கு.

1.வைகை பேரணையின் Pickup பகுதியிலிருந்து முழுமையாக குடிநீர் ஆதாரமாக கொண்டு 135 எல்.பி.சி.டி.–க்கு வடிவமைக்கப்பட வேண்டும்.

2.நீர் சுத்திகரிப்பு நிலையம் இடைநிலை தேவைக்கு வடிவமைக்காமல் இறுதி தேவைக்கு வடிவமைக்கப்பட வேண்டும்.

3.புதிய குடிநீர் திட்டத்திற்கான பகிர்மான குடிநீர் விநியோகம் நகர் முழுவதற்கும் DMA (Distinct Metering Area) கருத்தமைவில் வடிவமைக்கப்பட வேண்டும்.

4.புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்தும்போது உசிலம்பட்டி நகராட்சிக்கு ஏற்கனவே உள்ள பழைய திட்டமான ஆண்டிபட்டி–சேடபட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்தை துண்டிப்பு (Delink) செய்யலாம்.

எனவே, மேலே கண்டுள்ள வரிசை எண். 1 முதல் 4 முடிய உள்ளவற்றிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

19.06.2018–ம் தேதியன்று தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) தெரிவித்த விபரத்தின்படியும் மற்றும் மதுரை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் (திட்ட உருவாக்கப்பிரிவு) அவர்களின் 22.06.2018–ம் தேதிய கடிதத்தின்படி வைக்கப்பட்டுள்ள மன்றப்பொருளுக்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் :1** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 2**

உசிலம்பட்டி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2018–19–ன் ரூ. 600.00 இலட்சத்திற்கு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை மற்றும் பேவர் பிளாக் பணிகள் மேற்கொள்ள மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. சாலைப்பணிகளுக்கு உசிலம்பட்டி நகராட்சிக்கு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1298/2018/இ3, நாள். 27.6.2018–ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடுத்தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| சிப்பம்–I | | |
| 1 | வார்டு–1, மாமரத்துப்பட்டி சோலை நகரில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 7.00 |
| 2 | வார்டு–1, மாமரத்துப்பட்டி குறுக்கு தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 5.00 |
| 3 | வார்டு–1, மாமரத்துப்பட்டி பிரதான சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 25.00 |
| 4 | வார்டு–1, மாமரத்துப்பட்டி காலனி பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 22.00 |
| 5 | வார்டு–4, தேனி ரோடு தெற்குப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 16.44 |
| 6 | வார்டு–6, முருகன்கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 10.00 |
| 7 | வார்டு–7, பாக்கியா நகரில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 70.00 |
| 8 | வார்டு–10, பழைய போஸ்ட் ஆபீஸ் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| | **மொத்தம்** | **175.44** |
| சிப்பம்–II | | |
| 1 | வார்டு–7, நாகர்கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 12.00 |
| 2 | வார்டு–7, எம்.ஜி.ஆர். நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 30.00 |
| 3 | வார்டு–10, பி.எம்.டி. நகரில் கள்ளர் பெண்கள் விடுதி சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 18.00 |
| 4 | வார்டு–10, கனரா பேங்க் குறுக்குத்தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 10.00 |
| 5 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர் முதல் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| 6 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர் இரண்டாவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 10.00 |
| 7 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர் மூன்றாவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 10.00 |
| 8 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர் நான்காவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 25.00 |
| 9 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர் ஐந்தாவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| 10 | வார்டு–13, எஸ்.ஓ.ஆர்.நகர், ஆறாவது தெருவில் கிழக்குப்பகுதியில் | 19.43 |

| | | |
|---|---|---|
| | மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | |
| | **மொத்தம்** | **174.43** |
| சிப்பம்–**III** | | |
| 1 | வார்டு–14, பரமசிவம் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 14.00 |
| 2 | வார்டு–15, பாண்டிகோவில் மேற்குப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| 3 | வார்டு–15, சத்யாநகர் நான்காவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 10.00 |
| 4 | வார்டு–15, பூக்காரத்தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 22.00 |
| 5 | வார்டு–15, காமாட்சியம்மன்கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் தளம் அமைத்தல் | 20.00 |
| 6 | வார்டு–15, சத்யாநகர் மூன்றாவது தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் தளம் அமைத்தல் | 12.00 |
| 7 | வார்டு–16, வி.எம்.தெருவில் கிழக்குப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 5.00 |
| 8 | வார்டு–17, வி.கே.எஸ். தெரு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 12.00 |
| 9 | வார்டு–20, செல்வி மகால் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| 10 | வார்டு–22, பேரையூர் ரோடு மயானம் அருகில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 20.00 |
| 11 | வார்டு–22, பேரையூர் ரோடு மயானம் அருகில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 5.00 |
| 12 | வார்டு–23, நீதிமன்ற வளாக சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைத்தல் | 15.64 |
| | **மொத்தம்** | **175.64** |
| | **GST 12%, LWF1% & LS** | **74.49** |
| | **மொத்தம் கூடுதல்** | **600.00** |

மேற்கண்ட பணிகளுக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ. 600.00 இலட்சத்தில் தமிழ்நாடு நகர்ப்புறச்சாலைகள் மேம்பாட்டுத்திட்ட மான்ய நிதியாக ரூ. 228.00 இலட்சமும், மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மான்ய நிதி ரூ. 180.00 இலட்சமும், மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி ரூ.132.00 இலட்சமும் மற்றும் நகராட்சி பங்களிப்பாக ரூ. 60.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ. 60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :2** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 3**

இந்நகராட்சி 2018–19–ம் ஆண்டிற்கு பணியாளர்களிடமும் ஒப்பந்தகாரர்களிடமும் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரியினை இணையதளத்தில் உரிய படிவங்களில் Form No. 26Q2 24Q ஆகியவற்றில் பதிவேற்றம் செய்தமைக்குரிய செலவினம் ரூ. 19350/– (ரூபாய் பத்தொன்பது ஆயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்) தனியர் தணிக்கையாளர் திரு. எஸ்.எஸ்.சேதுராஜ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலுத்தலாம் அனுமதிக்கு.
(ந.க.எண். 2989/2017/பி1)

**தீர்மானம் எண் :3** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 4**

இந்நகராட்சி 2016–17–ம் ஆண்டிற்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதிக்கு தணிக்கை செய்து அறிக்கை தட்டச்சு செய்தமைக்குரிய செலவினம் ரூ. 11,000/– (ரூபாய் பதினொராயிரம் மட்டும்) திருமதி. எஸ். பரமேஸ்வரி முருகன் டைப்ஆபீஸ் தல்லாகுளம், மதுரை–2 அவர்களுக்கு வழங்கலாம் மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 2446/2016/பி1)

**தீர்மானம் எண் :4** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 5**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்பப 2018–19–ம் ஆண்டிற்கு முதல் அரையாண்டு முதல் ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 25 சதவிகிதம் உயர்வு செய்தது. தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ. 10773/– யை தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :5** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 6**

திரு. தேட்டாளன் என்ற வீரணன், சுப்பையா என்பவர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18–வது வார்டு வாலகுமார்பிள்ளை தெரு, நத்தம் சர்வே எண். 81–ல் உள்ள தெருவை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் ஒ.எஸ்.எண்.47 மற்றும் ஜெ.ஏ. எண். 161–ல் தொடர்ந்துள்ள வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரின் வழக்காடு கட்டணமாக ரூ. 5000/–த்தை திரு. பி.லட்சுமணன் வழக்கறிருருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண் :6**</u> <u>**நாள். 29.06.2018**</u>

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>**பொருள்: 7**</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்திற்குத்தேவையான ஜெராக்ஸ் எடுத்ததற்கான செலவினம் ரூ. 3936/– (ரூபாய் மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு மட்டும்) Tirupathi Office Product Madurai அவர்களுக்கு வரைவோலை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 2143/2018/பி1)

<u>**தீர்மானம் எண் :5**</u> <u>**நாள். 29.06.2018**</u>

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>**பொருள்: 8**</u>

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு ஏ4 பேப்பர் ஆடிட் சம்பந்தப்பட்ட உபயோகத்திற்கு பெரியநோட்டு, சிறிய நோட்டு மற்றும் அலுவலகத்தை சுத்தம் செய்ய மாப்பு, ஆசீட், பிரஸ் வாங்கியது மற்றும் ஆபீஸ் கவர்கள், டேக் வாங்கியது அதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.3600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.எழுதுபொருட்கள் அவசர அவசியம் கருதி பொருட்கள் வாங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)

<u>**தீர்மானம் எண் :8**</u> <u>**நாள். 29.06.2018**</u>

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>**பொருள்: 9**</u>

இந்நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும், வியாபாரிகள், மாணவ, மாணவியர்களுக்கும், மக்கும் குப்பை மக்காத குப்பைகளை பிரித்து உரம் தயார்க்கப்படும் விதிமுறைகளை விளக்கும் வகையில் முக்கிய இடங்களில் பதாகைகள் வைக்கவும், மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு பதாகைகள், நோட்டீஸ் தயார் செய்தல், ஆட்டோ மூலம் மைக்

விளம்பரம் செய்தல் உள்பட பணிகள் மேற்கொள்ளவும், புகைப்படம் எடுக்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.12,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொதுச்சுகாதாரம் நலன் கருதி செலவு மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 10/2017/எச்.1)

**<u>தீர்மானம் எண் :9</u>** **<u>நாள். 29.06.2018</u>**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 10</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்புப்பணியினை மேற்கொள்ள வீடு வீடாகச் சென்று லார்வா புழுக்களை ஒழிக்க தொட்டிகள் மற்றும் சின் டெக்ஸ் டெங்குகளில் மருந்து ஊற்ற தேவைப்படும் அபேட் மருந்தும் மற்றும் வீடு வீடாக சென்று டெங்கு முதிர்கொசுவை ஒழிக்க புகைமருந்து அடிக்க தேவைப்படும் டெக்மாலதையான் மருந்தும் தேவைப்படுகிறது. அபேட் மருந்து 100 லிட்டர் மற்றும் டெங்க மாலதையான் 200 லிட்டர் பெற ஆகம் உத்தேச செலவு தொகை ரூ. 3,00,000/–த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொதுச்சுகாதாரம் நலன் கருதி மருந்துகள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை SUG நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண் :10</u>** **<u>நாள். 29.06.2018</u>**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 11</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுச்சுகாதார பிரிவில் பயன்பாட்டில் இல்லாத பழுதடைந்த வாகனம் டிராக்டர் 1 எண்ணம் உள்ளது. இவ்வாகனம் பேரூராட்சி காலத்தில் 1974–ல் வாங்கப்பட்டது. பேரூராட்சியிலிருந்து நகராட்சியாகும் காலக்கட்டத்தில் இவ்வாகனத்தின் ஆர்.சி. புத்தகம் ஒப்படைக்கப்படவில்லை. மேற்படி பழுதடைந்த உபயோகமற்ற வாகனத்தை தற்போதைய சந்தை மதிப்பிற்கு விலை நிர்ணயம் செய்ய மதுரை, துணை இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்பு துறை மற்றும் மதுரை அரசு தானியங்கி பணிமனைக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், மேற்படி அலுவலகங்களிடமிருந்து அரசு விதிகளின்படி டிராக்டர் வாகனத்தை கழிவு செய்ய நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்படி வாகனத்தை நகராட்சி பொறியாளர் நிர்ணயம் செய்த விலையை (ரூ.15,000/–) அடிப்படை விலையாக நிர்ணயம் செய்து பொது ஏலத்தில் விடுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி கோர மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பொது ஏலத்தில் விடலாம்.

தீர்மானம் எண் :11 நாள். 29.06.2018

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 12**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–18, கருப்புக்கோவில் தெருவில் உள்ள சாலை மற்றும் காளியம்மன் கோவில்அருகில் உள்ள சாலை பழுதடைந்துள்ளது. மேற்கண்ட சாலைகளை சரிசெய்யும் பொருட்டு புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

தீர்மானம் எண் :12 நாள். 29.06.2018

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 13**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 100 எச்.பி. மோட்டார் உள்ளது. இந்த இரண்டு மோட்டார்களை இயக்க இரண்டு ஸ்டார்ட்டர் தேவைப்படும். தற்போது ஒரே ஒரு ஸ்டார்ட்டர் மட்டும் தான் உபயோகத்தில் உள்ளது. இதனால் ஒரே ஒரு மோட்டார் மட்டும் தான் இயக்கப்படும் தொடர்ந்து அடுத்தடுத்து மோட்டாரை இயக்க முடியாத நிலையில் இருப்பதால் பழுதடைந்த ஸ்டார்ட்டரை மாற்றிவிட்டு புதியதாக ஸ்டார்ட்டர் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்கலாம்

தீர்மானம் எண் :13 நாள். 29.06.2018

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 14**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று– நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய் ( 250mm dia AC Pipe) உடைப்பு ஏற்பட்டுள்ளது. பெரியசெம்மேட்டுப்பட்டி மகாலிங்கபுரம், காமராஜ் நகர், கருப்புக்கோவில் பாலத்திற்கு அடியில், மெய்யணம்பட்டி, மேக்கிழார்பட்டி விலக்கு, பெட்ரோல் பங்க் அருகில் சத்யா நகர் இடையபட்டி, சத்யா ஸ்கூல் அருகில், பாறைப்பட்டி பசும்பொன்நகர், எஸ்.ஓ.ஆர். நகர் மடச்சி, ஏ.டி.எஸ். மகால் ஆகிய இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால், நீர் உந்து செய்யப்படும் போது நீரின் அளவு குறைவாக பெறப்படுகின்றது. மேற்கண்ட இடங்களை நகராட்சிபொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் நேராய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட உடைப்புகளை குடிநீர் அவசர அவசியம்

கருதி பணியை மேற்கொண்ட திரு. ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் என்பவருக்கு 1,56,742/– வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு (15)–ன் கீழ் மேற்கொணட்டதையும் மன்றம் ஏற்கலாம். பணிக்கான செலவுத்தொகையை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண் :14** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 15**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் கிருமி நாசினியாக பயன்படுத்தப்பட்டு வரும் சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் தற்போது இருப்பு இல்லாத காரணத்தினால் சுண்ணாம்புத்தூள் 5000 கி.மீ. மற்றும் பிளிச்சிங் பவுடர் 2000 கி.மீ. தேவைப்படுவதால் மேற்கண்ட கிருமிநாசினிகளை பொதுச்சுகாதார நலன் கருதி கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 1,30,000/–த்திற்கு (ரூபாய் இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொதுச்சுகாதார நலன் கருதி பிளிச்சிங் பவுடர் மற்றும் பினாயில் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :15** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 16**

இந்நகராட்சி அலுவலகத்தில் கணினி பிரிவிலுள்ள கம்ப்யூட்டர் அனைத்திலும் டோனர் தீர்ந்து விட்டது. டோனர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பு ரூ. 18,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.கணினி பிரிவில் உள்ள கம்ப்யூட்டர் அனைத்திற்கு டோனர் வாங்குவதற்கும் அதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :16** **நாள். 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி